# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **02 பெப்ருவரி 2020** | **ஆண்டவரை காணிக்கையாக ஒப்புக்கொடுத்த விழா** | **முதல் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு…

**ஆண்டவரை ஆலயத்தில் காணிக்கையாக அர்ப்பணித்த விழா**

இன்றைய ஞாயிறு திருப்பலியில் பங்கேற்று, இறைவனைத் தொழுதிட கூடியிருக்கின்ற இறைமக்கள் அனைவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் இறை இயேசுவின் அன்பும் சமாதானமும் நிறைந்து நிலைத்திட வாழ்த்துகிறோம்.

“ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்“ என்னும் திருச்சட்டத்தை நிறைவேற்றும் வண்ணமாக, குழந்தை இயேசுவை ஆலயத்திற்கு எடுத்து வந்து அர்ப்பணம் செய்த நிகழ்வினை அன்னையாம் திருஅவை இன்று விழாவாகக் கொண்டாடுகின்றது. இந்த நாளில் இறைமகன் இயேசு தம்மீது நம்பிக்கை கொண்ட தம் மக்களை சந்தித்து, தம்மை வெளிப்படுத்திக் கொள்கிறார். தூய ஆவியாரின் ஏவுதலால் கோவிலுக்கு வந்த முதியோரான புனிதர்கள் சிமியோனும், அன்னாவும், அதே ஆவியாரால் உள்ளொளி பெற்று, அவரை ஆண்டவர் என அறிந்து அக்களிப்புடன் அறிக்கையிட்டனர். இந்த இரு புனிதர்களின் தளராத இறைநம்பிக்கையும், ஜெபவாழ்வும், மீட்பரை அடையாளம் கண்டுகொள்ள துணை செய்தன.

ஆழமான நம்பிக்கையோடு, இடையறாத இறைவேண்டலில் கடவுளுக்கு உகந்த வாழ்வை மேற்கொண்டிருந்தால், ஆண்டவரை அடையாளம் கண்டுகொள்ளும் இறைஅனுபவத்தை நாமும் பெற்றிடுவோம் என்பது திண்ணமே. ஆண்டவரை ஆலயத்தில் அர்ப்பணித்த இன்றைய நாளில், தங்களையே ஆண்டவருக்கு அர்ப்பணித்து வாழ்கின்ற குருக்கள், துறவறத்தார் மற்றும் அருள்சகோதரிகளுக்காக இந்த திருப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு

அன்பார்ந்தவர்களே! பல்வேறு நிதிசேகரிப்பு நடவடிக்கைகள் மூலமாக, நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்காக **இதுவரை** S$ 4.3 **மில்லியன்** சேர்க்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். மனமுவந்து நன்கொடையளித்த உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களது நன்றிகள்! நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்குத் தேவையான முழுத் தொகையான S$ 6.2 **மில்லியனை** அடைவதற்கு தொடர்ந்து உங்கள் தாராள மனதையும், செபங்களையும் வேண்டி நிற்கின்றோம்.



## தூய லூர்து அன்னை ஆலயத் திருவிழா 2020



நம்முடைய பங்கின் பாதுகாவலியாம் தூய லூர்து அன்னையின் ஆண்டுத் திருவிழா 30-01-2020 (வியாழன்) முதல் 07-02-2020 (வெள்ளி) வரை நவநாட்களும், **08-02-2020 சனிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவிழா திருப்பலியும் நடைபெறும்.** அதனைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவம் தாங்கிய தேர்ப்பவனியும் நடைபெறும். திருவிழா திருப்பலி நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு. வில்லியம் கோ அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படும்.



05-02-2020 (புதன்), 06-02-2020 (வியாழன்), 07-02-2020 (வெள்ளி) ஆகிய நாட்களில் மாலை 8:00 மணிக்குத் **தமிழில் நவநாள் திருப்பலி நடைபெறும்.** அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவும்.

**குறிப்பு:** நம் பங்கின் ஆண்டுத் திருவிழாவை சிறப்பிக்க நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. நன்கொடை அளிக்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.




## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை நடைபெறும் முழு இரவு செபம், வருகின்ற **பிப்ரவரி மாதம் நமது ஆலய ஆண்டுத் திருவிழாவின் காரணமாக நடைபெறாது** என்பதை கவனத்தில் கொள்ளவும்.

## இரண்டாவது காணிக்கை

இன்று திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாவது காணிக்கை, தூய வின்சென்ட் தெ பவுல் சபையினர் செய்யும் நற்பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். உங்கள் தாராள மனதிற்கு மிக்க நன்றி.

## மந்திரிக்கப்பட்ட குருத்தோலைகள் சேகரிப்பு





கடந்த ஆண்டு குருத்து ஞாயிறின் போது மந்திரிக்கப்பட்ட குருத்தோலைகள் விபூதிப்புதன் (26-02-2020) அன்று எரித்துப் பயன்படுத்த வேண்டியிருப்பதால், உங்கள் குருத்தோலைகளை வருகின்ற ஞாயிறு (09-02-2020) முதல் ஆலயத்தில் வைக்கப்படவுள்ள சேகரிப்புப் பெட்டியில் போடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | மலாக்கி 3: 1-4 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 24: 7, 8, 9, 10 (பல்லவி: 10b) |
| **பதிலுரை:** படைகளின் ஆண்டவர் இவர்; இவரே மாட்சிமிகு மன்னர். | |
| **இரண்டாம் வாசகம்:** | எபிரேயர் 2: 14-18 |
| **வாழ்த்தொலி:** அல்லேலூயா, அல்லேலூயா! இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி; இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை. அல்லேலூயா. | |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 2: 22-40 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 &மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

